**முதன்மை மாவட்ட நீதிமன்றம், சிவகங்கை**

**OS.No. 31/2024**

Date: 05.03.2026 PW.2 ( மலையரசன்)

**பிரதிவாதிகள் தரப்பு குறுக்குவிசாரணை :**

இந்த வழக்கில் நான் சாட்சியம் அளிப்பதற்காக நீதிமன்றத்திலிருந்து அழைப்பானை எதுவும் வரவில்லை என்றால் சரிதான். வாதி சிவானந்தம் கேட்டுக்கொண்டதற்காகத்தான் இங்க வந்து சாட்சி சொல்கிறேன் என்றால் சரிதான். இங்கு என்னிடம் காட்டப்படும் எனது சாட்சிய நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான் என்றால் சரிதான். இங்கு என்னிடம் காட்டப்படும் எனது சாட்சிய நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் வாதி சிவானந்தம் சொல்லிதான் தயார் செய்யப்பட்டது என்றால் சரிதான். மேற்படி நிரூபண வாக்குமூலத்தில் கடனுறுதி சீட்டில் நான் 2 வதாக சாட்சி கையொப்பம் செய்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 புரோ நோட்டில் உள்ள 2 வது கையொப்பம் என்னுடையதா என்றால் இல்லை. 1 வது சாட்சி கையொப்பம்தான் என்னுடையது.

**பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.**

சாட்சி சொல்லியபடி என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, திறந்த நீதிமன்றத்தில் சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு கையொப்பமிடப்பட்டுள்ளது.

KANNAYEERAM ARIVOLI

Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.03.06 18:38:16 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,
சிவகங்கை